அக்டோபர்: 30

## 8. சாந்தமாகிய கனி!

கனிவோடும், பணிவோடும் எல்லாரிடத்திலும் எல்லா சூழ்நிலைகளிலும் மனதளவிலும், செயல்களிலும் மனத்தாழ்மையாக நடந்துகொள்வதே சாந்தமாகிய கனி ஆகும். நமக்கு மேலே உள்ளவர்களிடம் மட்டும் அல்ல எல்லாரிடத்திலும் சாந்தமாக நடந்துகொள்ள வேண்டும். 1பேதுரு 3:15, மத்தேயு 5:5, கொலோசெயர் 3:12, 1தெசலோனிக்கேயர் 5:14, பிலிப்பியர் 4:5.

நான் சந்திக்கிற எல்லா மக்களிடத்திலும் எனக்குப் கோபமூட்டும் சூழ்நிலையில் யார் நடந்துகொண்டாலும் அவர்களிடத்தில் மிகுந்த சாந்தத்துடனும், கனிவுடனும், வணக்கத்துடனும் நடந்துகொள்ள வேண்டும்.

### கேள்விகள்:

1. சாந்தம் என்றால் என்ன?
2. நான் சந்திக்கிற எல்லா மக்களிடத்திலும் எனக்கு கோபமூட்டும் சூழ்நிலையில் யார் நடந்துக்கொண்டாலும் அவர்களிடத்தில் மிகுந்த சாந்தத்துடனும், நடந்துக்கொள்கிறேனா?

## 9. இச்சையடக்கமாகிய கனி!

### வாசிக்க: கொலோசெயர் 3:1-5

மனம் போன போக்கில் வாழாமல், மாம்சீக எண்ணங்களையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்திக் கொண்டு. கர்த்தருக்கு ஏற்றபடி கட்டுப்பாடுடனும், போதுமென்ற மனதுடனும் திருப்தியுடன் வாழ்வதே இச்சையடக்கமாகிய கனி ஆகும். கொலோசெயர் 3:1-5, 1கொரிந்தியர் 9:25, 1தீமோத்தேயு 6:6.

பணம், பெண், பதவி, உலக சிற்றின்பங்கள் பின்னே நான் ஓடாமலும், அவைகள் என்னைத் தேடி வந்தாலும் அவைகளால் நான் கறைபடாமல் இச்சையடக்கத்தோடு வாழ வேண்டும்.

### கேள்விகள்:

1. இச்சையடக்கம் என்றால் என்ன?
2. பணம், பெண், பதவி, உலக சிற்றின்பங்கள் பின்னே நான் ஓடாமலும், அவைகள் என்னைத் தேடி வந்தாலும் அவைகளால் நான் கறைபடாமல் இச்சையடக்கத்தோடு வாழ்கிறேனா?